Swiss Tamil Diaspora, C/O Tamil Election, Postfach 1511, 8021 Zürich
www.tamilelection.ch, info@tamilelection.ch

Zürich, 04.03.2010

# சுவிஸ் தேர்தல் குழவில் சுவிஸ் அரசியல் பிரமுகர்களின் பங்களிப்பு

வணக்கம்!

எமது தேர்தல் குழுவானது நீங்கள் எமது இணையத்தளத்தில் காண்பது போல் பல அமைப்புக்களை உள்வாங்கி செயற்படுகின்றது. அவர்கள் எமக்கு பக்கபலமாக நிற்கின்றனர். இத்தேர்தல் குழுவின் செயற்பாட்டுக்குழுவினராக தமிழ் டியஸ்பொறா அமைப்பினர் இருப்பதும் குறிப்பிடப்பட வேண்டிய விடயம். எமது அமைப்பில் குறிப்பாக இளைய தலைமுறையினர் இத்தேர்தலிற்குரிய பின்ணணி செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். இதனூடாக எமக்கு மொழிபிரச்சனை, நிர்வாகஒழுங்குபடுத்தல் கணணி மற்றும் சகல துறைகளிலும் சுயபலத்தில் நிற்க கூடிய வாய்ப்பு இருப்பது விசேட அம்சமாகும்.

எமது தேர்தல் குழுவில் பின்ணணி அனுசரணையாளர்களாக அல்லது தெளிவாக சொல்லப்போனால் ஆதரவாளர்களாக பல சுவிஸ்நாட்டு அரசியல் பிரமுகர்கள் இருப்பது சுட்டிக்காட்டத் தக்கது. இளம் தலைமுறையினர் மற்றும் சுவிஸ் அரசியல் வர்க்கத்தின் பங்களிப்புக்கு தமிழ் டியஸ்பொறா அமைப்பினரது மக்களை மையப்படுத்திய ஜனநாயக சிந்தனை தான் காரணம் என்றால் அது மிகையாது. எமது மக்களால் எமது மக்களுக்காக எமது மக்களின் பேரில் உருவாக்கப்படும் ஜனநாயக சக்தியே எமது எதிர்கால சுபீட்சமான வாழ்விற்கு வழிசமைக்கும் என்பதில் இவர்கள் எல்லாம் உறுதியாக இருப்பது இதன் மூலம் புலப்படுகின்றது.

இந்நாட்டு 25 வரையிலான ஊடகங்களும் அரசியல் பிரமுகர்களும் இவ்வருடம் தைமாதத்தில் நடைபெற்ற தமிழீழத்தனியரசிற்கான வாக்கெடுப்பின் போது காத்திரமாக ஆர்வத்தை காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இத்தகைய மக்கள் மயப்படுத்தப்பட்ட அணுகுமுறைக்கு பெரும் அங்கீகாரம் இருப்பது இவற்றினூடு புலனாகின்றது.

அந்த வகையில் சுவிசில் தமிழ் மக்களுக்கென ஜனநாயக வழியில் தேர்ந்தெடுக்கப்படும் மக்களவை ஒன்று அமைய இருப்பதானது சுவிஸ் நாட்டின் சமூகஇணைவாக்க அரசியல் பணிக்கு தமிழர்கள் முன்னுதாரணமாக செயற்படப்போவதற்கான அத்திவாரமாகும். இம்முன்னெடுப்பை சுவிஸ் அரசியல் சக்திகள் கூட ஆர்வத்துடன் உள்வாங்குவது நல்ல அறிகுறியாக

Swiss Tamil Diaspora, C/O Tamil Election, Postfach 1511, 8021 Zürich
www.tamilelection.ch, info@tamilelection.ch

இருக்கின்றது. இதனது பிரதிபலிப்புக்கள் எதிர்காலத்தில் காணக்கூடியதாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.
எமது இணையத்தளத்தில் சில பிரமுகர்களின் நிழற்படங்களை இணைத்துள்ளோம். இன்னும் பலரது அனுமதிக்காக காத்திருக்கின்றோம். இதன் மூலம் சுவிசின் ஒட்டுமொத்த கவனத்தை தமிழர் பக்கம் திருப்புவதும் பரஸ்பரம் எமக்கும் இந்நாட்டவருக்குமான உறவை வலுப்படுத்துவதும் எமது நோக்காக உள்ளது.
இத்தருணத்தில் தமிழ் டியஸ்பொறா ஒன்றை சொல்லிக் கொள்ள விரும்புகின்றது. நாம் நியாயமான மக்கள் மயப்படுத்தப்பட்ட ஜனநாயக பண்புகளை உண்மையாக ஊக்குவின்ற செயற்பாடுகளிற்கு உறுதுணையாக இருப்போம். இளைய தலைமுறையினராகிய எமக்கு மக்களுக்கிடையேயான சுமூகமான நல்லுறவும் கல்வி மற்றும் பொருளாதார மேம்பாடும் முக்கிய பணிகளாக இருக்கின்றன. அதற்காக உழைப்போம். இதற்கு மூத்த தலைமுறையினர் தமது பூரண ஒத்துழைப்பை நல்க வேண்டும் என்பதே எமது அவா.

மேலதிக தகவல்களிற்கு எமது இணையத்தளத்தை பார்வையிடவும்.
ஊடகச்செய்தி 04032010

Swiss Tamil Diaspora (STD)
C/O Tamil Election Switzerland (TES)